# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2008 / 2009
## HELD IN AUGUST - 2009

## TML 2.11 – HISTORY OF TAMIL LITERATURE FROM EUROPEAN PERIOD TO CONTEMPORARY PERIOD

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. "ஐரோப்பியரின் வருகையினால் தமிழ் இலக்கியமானது பல்துறையிலும் வளர்ச்சியடைந்தது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை தெளிவுபடுத்துக.

02. ஐரோப்பியர் கால தமிழ் இலக்கிய வரலாற்றில், வீரமாமுனிவரின் படைப்பு முயற்சிகள் வகிக்கும் இடம் பற்றிக் கருத்துரை வழங்குக.

03. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நூற்பதிப்புத்துறை வளர்ச்சியடைந்தவாற்றை தெளிவுபடுத்துக.

04. பாரதிதாசனின் கவிதைப் பண்புகளை விளக்கி, இருபதாம் நூற்றாண்டு தமிழ்க் கவிதை வளர்ச்சியில், அவர் கவிதைகள் ஏற்படுத்திய தாக்கம் குறித்து சுருக்கமாக ஆராய்க.

05. "தமிழ் நாவல் உலகில் ஜெயகாந்தன் ஒரு புயல் போல் நுழைந்தவர்." ஜெயகாந்தனின் நாவல்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றின் பொருத்தப்பாட்டை விமர்சிக்குக.

06. குறைவாகவே எழுதினாலும் ஒரு தனித்துவமான சிறுகதை ஆசிரியராக தன்னை வெளிப்படுத்திய, மௌனியின் படைப்புகள் பற்றி மதிப்பிடுக.

07. பாரம்பரிய தமிழ் நாடக முறைமைகள் இருபதாம் நூற்றாண்டில் பேணப்பட்டவாற்றை தெளிவுபடுத்துக.

08. கீழ்க் குறிப்பிடப்படுவோரில் எவரேனும் இருவரைத் தெரிந்து, அவர்கள் தமிழுக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

(அ) தத்துவபோக சுவாமிகள்
(ஆ) புதுமைப்பித்தன்
(இ) சுந்தர ராமசாமி
(ஈ) சி.வை. தாமோதரம்பிள்ளை
(உ) பம்மல் சம்பந்த முதலியார்

***